**செ. கு. எண்:104** **நாள்: 23.07.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 23.7.2017

சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், மீனாம்பாள் சாலை, சிட்கோ நகர் மெயின் ரோடு சந்திப்பு, கவியரசு கண்ணதாசன் நகரில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான உணவகத்தில், 15.7.2017 அன்று நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்தில், மூடியிருந்த உணவகத்தில் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்ததில், பலத்த காயமடைந்தவர்களுக்கு, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரைச் சேர்ந்த திரு. ஜெகதீசன் என்பவரின் மகன் திரு. ஆனந்தன் என்பவர் 20.7.2017 அன்றும், கவியரசு கண்ணதாசன் நகரைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் என்பவரின் மகன் திரு. மகிழவன் என்பவர் 21.7.2017 அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. ஆனந்தன் மற்றும் திரு. மகிழவன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த திரு.ஆனந்தன் மற்றும் திரு. மகிழவன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**